DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| | | | |
|---|---|---|---|
| S.T.C.NO. 1676 / 2018 | | Crime No.: | Station : |
| PW : 1 | | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | முருகேசன் | Caste | |
| Father's Name | குட்டியாக் கவுண்டர் | Calling | ஓட்டுநர் |
| Village | சத்தியமங்கலம் | Religion | |
| Taluk | | Age | 70 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 01.03.2024 |

எதிரி ஆஜர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-

1. சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் புகார்தாரர். புகார்தாரர் தரப்பு சாட்சி 1 ஆக இருந்து எனது முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதை சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். பிரமாணப் பத்திரிக்கையிலுள்ள சங்கதிகளைப் படித்துக் காண்பித்தார்கள் சரியாக இருந்தது கையொப்பம் செய்தேன். புகாருடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை சான்றாவணங்களாக பெற வேண்டுகிறேன். 02.11.2018 தேதியிட்ட 116184 என்ற எண் கொண்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சத்தியமங்கலம் கிளையின் ரூ.2,00,000/−க்கான காசோலை அசல் **பு.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 07.11.2018 தேதியிட்ட 116183 என்ற எண் கொண்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சத்தியமங்கலம் கிளையின் ரூ.2,00,000/−க்கான காசோலை அசல் **பு.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. காசோலை எண்.116184 Account Closed என்று திருப்பப்பட்டதற்கான 05.11.2018 தேதியிட்ட குறிப்பாணை அசல் **பு.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. காசோலை எண்.116183 Account Closed என்று திருப்பப்பட்டதற்கான 12.11.2018 தேதியிட்ட குறிப்பாணை அசல் **பு.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 16.11.2018 தேதியிட்ட புகார்தாரரால் எதிரிக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக ரசீதுடன் **பு.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான India Post office Consignment track details 06.12.2018 **பு.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி தரப்பு வழக்குரைஞர், புகார்தாரர் தரப்பு**

**வழக்குரைஞருக்கு அனுப்பிய 22.11.2018 தேதியிட்ட பதிலறிவிப்பு பு.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புகாரில் கோரியுள்ள பரிகாரம் வழங்குமாறு இறைஞ்சுகிறேன்.

(எதிரி தரப்பு கற்றறிந்த வழக்குரைஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)